# மாதிரி - முதல் பருவத் தொகுத்தறி மதிப்பீடு -2018

## தமிழ் முதல் தாள் (செய்யுள், உரைநடை)

ஒன்பதாம் வகுப்பு காலம் : 2-30 மணி

(மொத்த மதிப்பெண்கள் : 60)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :** **5 x 1 = 5**

1. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு –

அ. வேற்றுமைத்தொகை ஆ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ. பண்புத்தொகை ஈ. வினைத்தொகை

2. மல்லல் மூதூர் வயவேந்தே- கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

3. தீரா இடும்பை தருவது எது?

அ. ஆராயாமை, ஐயப்படுதல் இ. பெருமை, சிறுமை

ஆ. குணம், குற்றம் ஈ. நாடாமை, பேணாமை

4. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு

இ) தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

5. தமிழ்விடு தூது நூலை முதன் முதலில் பதிப்பித்தவர்...............................

அ) உ.வே.சுப்ரமணியர் ஆ) உ.வே.வேங்கிட சாமி இ) உ.வே.சாமிநாதர் ஈ) உ.வே.சாமி பிள்ளை

**II.கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 x 1 = 5**

6. திராவிடம் என்னும் சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் -------------.
7. தமிழ் விடுதூது ------------- இலக்கிய வகையைச் சேர்ந்தது.
8. மிசை என்பதன் எதிர்ச்சொல் ------------- .
9. மக்கள் பருகு நீர் நிலைக்கு ------------- என்று பெயர்.
10. இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவராகப் பதவியேற்ற முதல் தமிழர் -------------.

**III.பொருத்துக.** **4 x 1 = 4**

| | | |
|---|---|---|
| 11. தண்ணீர் தேசம் | - | ராபர்ட் கால்டுவெல் |
| 12. திராவிட மொழிகள் ஒப்பிலக்கணம் | - | சேக்கிழார் |
| 13. தமிழோவியம் | - | வைரமுத்து |
| 14. பெரியபுராணம் | - | ஈரோடு தமிழன்பன் |

**IV. குறுவினா** **6 x 2 = 12**

**(ஏதேனும் ஆறனுக்கு மட்டும் விரிவான விடையளி)**

15. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

16. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

17. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண் - இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?

18. தொல்லியல் ஆதாரங்கள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும். ஏன்?

**என்.எஸ்.ஜான் ஜோஸப் ராஜ்,** M.A.,B.Ed.,
**(தமிழாசிரியர்)**
**புனித வளனார் கல்லூரி மேல்நிலைப் பள்ளி, திருச்சி-2.**

19. பட்டிமண்டபம், பட்டிமன்றம் – இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.

20. கூட்டுப் புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

21. மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
இவ்வடிகளில் தொல்காப்பியர் குறிப்பிடும், மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உயிர்கள் யாவை?

22. சங்க இலக்கியத்தில் குறிப்பிடும் கடற்கலன்கள் யாவை?

## V. சிறுவினா 4 x 4 = 16

### (ஏதேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி)

23. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்– உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

24. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்யவேண்டியவற்றை எழுதுக.

25. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக

26. சொல்லுக்கான பொருளைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ. நுணங்கிய கேள்வியர் – நுட்பமான கேள்வியறிவு உடையவர்

இ. செவிச் செல்வம் – கேட்பதால் பெறும் அறிவு

ஆ. பேணாமை – பாதுகாக்காமை

ஈ. அறனல்ல செய்யாமை – அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல்

27. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

28. தமிழ் மொழி நிலைத்திருக்க நாம் செய்ய வேண்டுவன யாவை?.

## VI. நெடுவினா 2 x 6 = 12

### (கீழ்காணும் வினாக்களுக்கு விரிவான விடை தருக.)

29. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

(அல்லது)

ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

30. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

## VII. அடிபிறழாமல் எழுதுக. (6)

31. "அறிவியல் ............... "எனத் தொடங்கும்" ஓ என் சமகாலத் தோழர்களே!" - பாடல்.

என்.எஸ்.ஜான் ஜோஸப் ராஜ்,M.A.,B.Ed.,
(தமிழாசிரியர்)
புனித வளனார் கல்லூரி மேல்நிலைப் பள்ளி, திருச்சி-2.